# எரிசக்தித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 14

## அறிவிப்புகள்
## 2013 – 2014

**திரு.நத்தம் ஆர்.விசுவநாதன்**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்

# அறிவிப்புகள்

## 1. குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் (Kundah pumped storage hydro electric scheme) (4 x 125 மெகாவாட்)

குந்தா நீரேற்று புனல் மின் திட்டத்தின் (Kundah pumped storage hydro electric scheme) (4 x 125 மெகாவாட்) முதல் கட்டமான 125 மெகாவாட் கட்டுமானப் பணிகளுக்கான தொடக்க நிலைப் பணிகள் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## 2. தூத்துக்குடி அனல் மின்நிலைய 4வது அலகின் செயல் திறன் மேம்பாடு

தூத்துக்குடி அனல் மின் நிலைய 4வது அலகின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, கட்டுப்பாட்டு அமைப்பு (Control System) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 7 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

## 3. வடசென்னை அனல் மின் நிலையத்தில் புதிய சாம்பல் சேமிப்பு கலன்கள்

வடசென்னை அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் சாம்பலை (Fly Ash) சேமித்து பகிர்ந்தளிக்கும் வகையில் **36** கோடி ரூபாய் செலவில் ஒவ்வொன்றும் **1000** டன் திறன் கொண்ட **3** புதிய சாம்பல் சேமிப்பு கலன்கள் (Fly Ash Silos) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** நிறுவப்படும். இதன் மூலம் சுற்றுச்சூழல் மாசும் கட்டுப்படுத்தப்படும்.

## 4. தூத்துக்குடி அனல் மின் நிலைய 4வது அலகின் கொதிகலன் திறனை மேம்படுத்துதல்

தூத்துக்குடி அனல் மின் நிலைய 4வது அலகின் கொதிகலனின் செயலற்ற நேரத்தைக் (Boiler downtime) குறைத்து அதன் திறனை மேம்படுத்தவும், மின் நிலை விரைவூக்கி (Electro Static Precipitator) மூலம் சுற்றுச்சூழல் மாசினை (Environmental pollution) கட்டுப்படுத்தும் பொருட்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 21 கோடி ரூபாய் செலவில் கொதிகலன் பாகங்கள் (Boiler parts) புதுப்பிக்கப்படும்.

## 5. மேட்டூர் அனல் மின் நிலைய 3வது அலகின் கொதிகலன் திறனை மேம்படுத்துதல்

மேட்டூர் அனல் மின் நிலைய 3வது அலகின் கொதிகலன் திறனை (Boiler efficiency) மேம்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 6** கோடி ரூபாய் செலவில் மறுசூடாக்கி சுருள் (Reheater Coil) மாற்றி அமைக்கப்படும்.

## 6. வடசென்னை அனல் மின் நிலையத்தில் நிலக்கரி கையாளும் பிரிவின் (Coal Handling System) செயல்திறனை மேம்படுத்துதல்

வடசென்னை அனல் மின் நிலையத்தில் நிலக்கரி கையாளும் பிரிவின் (Coal Handling System) செயல்திறனை மேம்படுத்த, உள் நிலக்கரி கையாளும் பிரிவின் அடுக்கி எடுக்கும் இயந்திரம் (Stacker Reclaimer) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 11 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

## 7. ஒருங்கிணைக்கப்பட்ட மின்சுமை அனுப்புகை மற்றும் தகவல் தொடர்பு முறை (Unified Load Despatch & Communication) நவீன மயமாக்குதல்

தற்போது உள்ள மின் சுமை அனுப்புகை மையத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மின்சுமை அனுப்புகை மற்றும் தகவல் தொடர்பு முறை (Unified Load Despatch & Communication) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 20 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

## 8. கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்ட அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டுதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்ட அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும்.

## 9. மாதிரி சூரிய ஒளி மின் நிலையங்கள் (Model Solar Installations) அமைத்தல்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 50 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிகள், நியாயவிலைக் கடைகள், பொதுச் சுகாதார மையங்கள் போன்ற கட்டடங்களில் மாதிரி சூரிய ஒளி மின் நிலையங்கள் (Model Solar Installations) அமைக்கப்படும். இதனடிப்படையில் இத்திட்டத்தை அந்தந்தத் துறைகள் பின்னர் விரிவுபடுத்திக் கொள்ளும்.

## 10. மேற்கூரை சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் (Rooftop Solar Power Plant) அமைத்தல்

தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் மின் தேவையின் பகுதியினை ஈடுசெய்யும் வகையில் மேற்கூரை சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் (Rooftop Solar Power Plant) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

## 11. விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் மின்னாற்றல் மிக்கதாக மேம்படுத்துதல்

தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் மின் நுகர்வைக் குறைக்கும் விதமாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** தற்போதுள்ள விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் 40 இலட்சம் ரூபாய் செலவில் மின்னாற்றல் மிக்கதாக (Energy Efficient) மாற்றி அமைக்கப்படும். இதே போன்று எழிலகம் பிரதானக் கட்டடத்திலும் மின் சேமிப்பு முறைகள் (Energy Efficiency Measures) 36.25 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

## 12. மின் ஆய்வாளர்களின் ஆய்வுக்கு கருவிகள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** மின் ஆய்வாளர்களின் ஆய்வுக்கு வசதியாக 12 இலட்சம் ரூபாய் செலவில் கையடக்க மின்கசிவு கண்டறியும் கருவி (Handheld earth leakage detector), மின்னோட்ட சோதனைக் கருவி (Tong Tester) மற்றும் காப்புத்தடை அளவீட்டுக் கருவி (Insulation Resistance Tester) ஆகியவை வழங்கப்படும்.

**திரு.நத்தம் ஆர்.விசுவநாதன்**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்